සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment


| මගේ අංකය<br>**எனது இல**<br>**My No** | DSD/HO/08/PM/04/E.POWER- 2025 | ඔබේ අංකය<br>**உமது இல**<br>**Your No** | ........................................ | දිනය<br>**திகதி**<br>**Date** | 2025.02. |
|---|---|---|---|---|---|

## சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் ;- 2025/01

சகல மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
மாவட்ட பிரதி/உதவி பணிப்பாளர்கள்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சங்க/வங்கி முகாமையாளர்கள்.

### சமூக வலுவூட்டல் வேலை திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் - 2025

2023 ஆம் ஆண்டில் சமுர்த்தி நிவாரண உதவி வேலை திட்டம் நிறுத்தப்பட்டவுடன் ஆரம்பிக்கப்பட்ட "அஸ்வெசும" வேலை திட்டத்தின் கீழ் நன்மைகளை பெறுகின்ற குடும்பங்களை தங்கி வாழும் மனநிலையில் இருந்து மீட்டி நிலைபேரான வாழ்க்கை நிலைக்கு உயர்த்துவதனை குறிக்கோளாக கொண்டு அக்குடும்பங்களை குறிப்பிட்ட கால வரையறைக்குள் வலுவூட்டும் வேலைத்திட்டம் ஒன்றினை செயல்படுத்துவதற்கு 2023.04.14 மற்றும் 2023.09.25 ஆகிய திகதிகளில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டங்களின் போது வழங்கப்பட்ட தீர்மானங்களான அ.பத்./23/730/604/073 மற்றும் அ.பத்23/1811/604/178 என்பனவற்றின் மூலம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அதிகாரத்தினை வழங்கியுள்ளது. அதன் பிரகாரம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வலுவூட்டல் திட்டத்தின் பொருட்டு 2023.03.19 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

02. மேலும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டுவதன் கீழ் சமுர்த்தி நிவாரண உதவி வேலைத் திட்டத்திலிருந்து நன்மைகளைப் பெற்ற இருப்பினும் "அஸ்வெசும" நன்மைகள் கிடைக்கப்பெறாத குடும்பங்களை தெரிவு செய்து அவர்களின் பொருட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வலுவூட்டுவதற்கும் எண்ணியுள்ளது.

03. அதன் பிரகாரம் 2025 - 2029 காலப்பகுதிக்குள் 15 இலட்சம் "அஸ்வெசும" பயனாளிக் குடும்பங்கள் மற்றும் அஸ்வெசும கிடைக்கப் பெறாத குறைந்த வருமானம் பெறும் (சமுர்த்தி நிவாரணத்தினைப் பெற்ற) 05 லட்சம் குடும்பங்கள் உட்பட்டதாக மொத்தம் 20 லட்சம் குடும்பங்களை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகின்றது.

04. இதன் கீழ், ஒரு வருடத்தில் குறைந்த வருமானம் பெறும் 04 லட்சம் குடும்பங்களை வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மக்களை வலுவூட்டும் வேலைத்திட்டமானது கீழுள்ள பிரகாரம் முக்கிய கூறுகள் மூன்றின் கீழ் நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்படும்.

1. வலுவூட்டும் தேசிய வேலைத் திட்டம் (திறைசேரி நிதியமும் திணைக்கள நிதியத்தின் கீழும் செயல்படுத்தப்படும்)
2. ஆசிய அபிவிருத்தி வங்கி முன்னோடி வேலைத் திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவி)
3. உலக வங்கி முன்னோடி வேலை திட்டம் (உலக வங்கி கடனுதவி)

05. 2024.12.16 ஆம் திகதி விடயப் பொறுப்பு அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, "அஸ்வெசும்" நன்மைகளை பெறும் சகல சமூக குழுக்களுக்கும் சொந்தமான குடும்பங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி நிவாரண உதவி பெற்ற குறைந்த வருமானம் பெறுவோரையும் வலுவூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அங்கு தற்போது நடைமுறையில் உள்ள முன்னோடிக் கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளின் பயனாளிகளை வலுவூட்டும் பொருட்டு பின்பற்ற வேண்டிய முறையினையே தேசிய வேலை திட்டத்திலும் தொடர்புபடுத்திக் கொண்டு சகல வேலைத் திட்டங்களையும் ஒரே மாதிரியாக செயல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.


**1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step. 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

06. அதன் பிரகாரம், 2025 ஆம் ஆண்டில் மக்களை வலுவூட்டும் பொருட்டு தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் போது, கீழுள்ள விடயங்கள் தொடர்பிலும் வழிகாட்டல்கள் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

- இலக்கிடப்பட்ட குழுக்களை இனம் காணுதல்.
- களத்தில் உள்ள (கிராம உத்தியோகத்தர் பிரிவு) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொருட்டு வருடாந்த இலக்கினை வழங்குதல்
- கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் குடும்பங்களை இனங்காணுதல்,
- அஸ்வெசும் பயனாளி/குறைந்த வருமானம் பெறும் இலக்கு குடும்பங்களை இனம் காணும் எடுகோள்கள்.
- குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல்.
- வலுவூட்டல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்
- வேலை திட்டத்தினை பின்பணி ஆய்வு செய்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு

07. 2025 ஆம் ஆண்டில் சமூக வலுவூட்டல் வேலை திட்டத்தினை மாவட்ட 01ம் இணைப்புடன் பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்குரியதாக வழிகாட்டல்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

திட்டமிடப்பட்டுள்ள பிரகாரம் குடும்ப வலுவூட்டல் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாகிக்கொள்ள தங்களது ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

சீடீ.களுஆரச்சி,
பணிப்பாளர் தலைமையதிபதி.

பிரதிகள் -

1. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
2. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
3. கணக்காய்வாளர் தலைமையதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம் - த.கூ.க. பொருட்டு
4. மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
5. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
7. சகல பிரிவுத் தலைவர்கள், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - உ.ந. பொருட்டு

Translated By- M.M.M Jawhar (Translator)